# சிலப்பதிகாரத்தில் ஆன்மநேயம்

By


## ஹெப்சி ரோஸ் மேரி, அ.

*இணைப்பேராசிரியர் (ம) தமிழ்த் துறைத்தலைவர், கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், கேரளா, இந்தியா.*



**ஆய்வுச்சுருக்கம்**

*வாழ்க்கையின் அடிப்படையாக அமைவது மனிதநேயம் ஆகும். இம்மனிதநேயத்துள் அன்பு, இரக்கம், தியாகம், பொறுப்பு ஆகியவை அடங்கும். மனிதநேயத்துக்கு அடிப்படையாக அமைவது அன்பு. அவ்வன்பு விலைமதிக்க இயலாத அணிகலனாக விளங்குகிறது. "அன்பைவிடப் பணிவினைத் தரவல்லது என வேறு எதனையும் கற்பனை செய்து கூடப்பார்க்க முடியாது" என்பார் காந்தியடிகள். அவ்வன்பே ஆன்ம நேயத்திற்கு அடிப்படையாக அமைகிறது. சகமனிதர்கள் மீது காட்டப்படும் கருணையையும் அன்பையும் மனிதநேயம் (Humanity) என்றும் அனைத்து உயிர்களிடமும் காட்டும் அன்பை உயிர்நேயம் (Compassion) அல்லது ஆன்மநேயம் என்றும் கொள்வர். இரட்டைக்காப்பியத்துள் ஒன்றாக விளங்கும் சிலப்பதிகாரம் காட்டும் ஆன்ம நேயச்சிந்தனையை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*


***கலைச்சொற்கள்:*** *சிலப்பதிகாரம், ஆன்மநேயம், மனிதநேயம்.*

**முன்னுரை**

வாழ்க்கையின் அடிப்படையாக அமைவது மனிதநேயம் ஆகும். இம்மனிதநேயத்துள் அன்பு, இரக்கம், தியாகம், பொறுப்பு ஆகியவை அடங்கும். மனிதநேயத்துக்கு அடிப்படையாக அமைவது அன்பு. அவ்வன்பு விலைமதிக்க இயலாத அணிகலனாக விளங்குகிறது. "அன்பைவிடப் பணிவினைத் தரவல்லது என வேறு எதனையும் கற்பனை செய்து கூடப்பார்க்க முடியாது" என்பார் காந்தியடிகள். அவ்வன்பே ஆன்ம நேயத்திற்கு அடிப்படையாக அமைகிறது. சகமனிதர்கள் மீது காட்டப்படும் கருணையையும் அன்பையும் மனிதநேயம் (Humanity) என்றும் அனைத்து உயிர்களிடமும் காட்டும் அன்பை உயிர்நேயம் (Compassion) அல்லது ஆன்மநேயம் என்றும் கொள்வர். இரட்டைக்காப்பியத்துள் ஒன்றாக விளங்கும் சிலப்பதிகாரம் காட்டும் ஆன்ம நேயச்சிந்தனையை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அன்புதான் இன்பத்தின் ஊற்றுக்கண்ணாகத் திகழ்கிறது. இதனைத் தொல்காப்பியர்,

ஆறறி வதுவே அவற்றோடு மனனே-தொல்.
மரபியல் 27

என்று விளக்குகிறார். பிற உயிர்களைக் காட்டிலும் ஆறாவது அறிவை பகுத்தறியும் அறிவை பெற்றவர்கள் மனிதர்கள். அவ்வறிவு மனதோடு தொடர்புகொண்டது என்பது தொல்காப்பியர் கருத்து. மனிதனை மனிதனாக நிலைநிறுத்துவது மனம். எனவே தான் திருவள்ளுவர்,

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்.
(குறள். 457)

என்று தனிமனித மனங்களின் இயல்பைக் கூறுவதன் வழியாக திருவள்ளுவர் உயர்ந்த எண்ணங்களைச் சிந்தித்து அவற்றின் வழி நடக்க வேண்டிய இனநலத்தையும் கூறுகிறார். அற இலக்கியங்கள் மட்டுமன்றி காப்பியங்களும் மனித நேயத்தின் உறைவிடமாகத் திகழ்கின்றன. இரட்டைக்கப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் சமுதாயத்தில் உயர்ந்த செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தின் கதையை எடுத்துரைக்கும் போக்கில் பல வாழ்வியல் அறக்கருத்துக்களையும் எடுத்துச்செல்வதைக் காணலாம். சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகளுள் ஒன்றான "அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றம்" என்னும் கூற்று சமூகநேயத்தை மிகுதியாக வலியுறுத்துகிறது.

**ஆன்மநேயம்**

சிலப்பதிகாரத்தில் மக்கள் நலனைப் போற்றும் வகையிலேயே இயற்கையையும், நாடு, நாகரையும் இளங்கோவடிகள் போற்றுகிறார்.

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண்
குடைபோன்று இவ்
அங்கண் உலகளித்த லான்.
ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம் திரிதலான்
மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்கு அவன்அளிபோல்
மேல்நின்று தான்சுரத்த லான்

(சிலம்:1: 1-9)

இப்பாடலில் திங்கள், ஞாயிறு, மாமழை ஆகிய இயற்கையைப் போற்றுவதைக்காணலாம். மன்னுயிர்கள் செழித்தோங்க இவ்வியற்கை வழிகோலுவதால் இயற்கையைப் போற்றுகின்றார். எனவே சிலப்பதிகாரத்தில் ஆன்ம நேயக் கோட்பாடு இடம்பெறுவதைக் காணலாம். மேலும், புகார் நகரின் சிறப்பையும் அங்கு வாழ்ந்த பலவகைக் குடியினர் குறித்துக் கூறும்பகுதியிலும் ஆன்ம நேயச் சிந்தனை இடம் பெறுகின்றன.

கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழுகுமெய் யாளரும்முழுகினர் ஆடிப்
பழுதுதில் காட்சி நன்னிறம் பெற்று

(இ. வி ஊ.கா.118-120)

என்னும் அடிகளில் கூனர், குருடர், ஊமையர், செவிடர், உடல் அழுகும் தொழு நோயாளர் போன்றவர்கள் இலஞ்சி மன்றத்திலுள்ள பொய்கையில் நீராடியபோது உடல் ஊனம் நீங்கி குணம் அடைந்தனர் என்பதைச் சிலம்பு காட்டுகிறது. மேலும் பாம்புக்கடிபட்டோர், விடத்தை அறுந்தி துன்புறுவோர், பேயினால் துன்பம் அடைவோர் அனைவரும் இலஞ்சி மன்றத்தை வலம்வந்து வணங்க அனைத்து துயரும் நீங்கும். இவ்வாறு மக்களுக்குத் துன்பம் விளைவிக்காத நாட்டைப் பற்றி இளங்கோவடிகள் கூறுகிறார். இதில் ஆன்மநேயச் சிந்தனையைக் காணமுடிகிறது.

**இரக்கம்**

புகார்க்காண்டம் வேனிற்காதையில் கோவலனைப் பிரிந்த மாதவியின் மன நிலையைக் கண்டு வருந்திய இருவர் கோவலனிடம் தூது செல்கின்றனர்.

1. வயந்த மாலை – மாதவியின் தோழி
2. தேவந்தி – கண்ணகியின் தோழி

மாதவியைவிட்டு கோவலன் பிரிந்ததும் அப்பிரிவுத்துயர் தாங்காது மாதவி அழுது புலம்புகிறாள். வயந்தமாலையைக் கோவலனிடம் தூது அனுப்பி தான் கைப்பட எழுதிய மடலையும் வயந்தமாலையிடம் கொடுத்து அனுப்புகிறாள். கானல் வரியில் மாதவி பாடிய பாடலில் அவள் மாற்றான் ஒருவனை நேசிப்பது போன்ற குறிப்பு இருந்ததால் கோவலன் அவளைவிட்டு பிரிந்து செல்கின்றான். வயந்தமாலை கொண்டு வந்த மடலையும் ஏற்க மறுக்கிறான் கோவலன்.

கோவலன் புகார்நகரில் மன்னருக்கு இணையாக வைத்துப் பார்க்கும் உயர்ந்த வணிகர் குடியில் பிறந்தவன். இவன் சிறந்த மனிதநேயச் சிந்தனை மிக்கவன் என்பதற்குப் புகார்காண்டத்து எந்தச் செய்தியும் இல்லை. ஆனால் மதுரைக்காண்டத்தில் தலைச்செங்கானம் என்ற ஊரைச் சேர்ந்த நான்கு வேதம் அறிந்த அந்தணனான மாடலன் வாயிலாக இளங்கோவடிகள் இதனை உணர்த்துகிறார். மாதவி நடிப்பில் தேர்ந்தவள், அவள் என் பிரிவால் வருந்தும் தேர்ச்சியில் இருக்கும் நடிப்பினை நான் அறிவேன். என்னைப் பிரிந்து கண்டோரிடம் புலம்பி அழும் நடிப்பினையும் நான் அறிவேன் என்று கோவலன் மாதவியை நடிப்பவள் என்று பழித்து அவள் அனுப்பிய மடலை மறுக்கிறான். இதைக்கேட்டு வாடிய வயந்தமாலை கோவலனின் கோபத்தை அவ்வாறே கூறாமல், அதனை மறைத்து,

மாலை வாரார் ஆயினும் மாண் இழை
காலை காண்குவாம் எனக் கையறு நெஞ்சமொடு
பூமலர் அமளிமிசைப் பொருந்தாது வதிந்தனள்

(சிலப். வேனிற். 115-117)

கோவலன் வாங்க மறுத்த மடலைப் பெற்றுக்கொண்டதாகவும் இப்போது ஏதோ கோபத்தில் இருக்கிறான் மாலையில் வராவிட்டாலும்

காலையில் வருவார் என்று மாதவியைத் தேற்றுகிறாள்.

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.
(குறள். 292)

என்ற குறளுக்கு ஏற்ப உண்மையை மறைத்து மாதவியைத் தேற்றுகிறாள். இன்று மனிதரிடம் இல்லாத பண்பு வயந்தமாலையிடம் காணப்பட்டது. வயந்தமாலை மாதவியைத் தேற்றும்போது மறுபக்கம் தேவந்தி கண்ணகியைத் தேற்றுகிறாள். சிலப்பதிகாரத்தின் காப்பியத் தலைவி கண்ணகியின் உற்ற தோழி தேவந்தி. மதுரையில் கண்ணகிக்கு நிகழப் போகும் தீமையைத் தனக்கு முன்னறிவிக்கும் விதத்தில் தோன்றிய கனவைக் கண்ணகி பகிர்ந்து கொள்வது இந்தத் தேவந்தியோடுதான். தேவந்தியும் கண்ணகியைப் போலவே கணவனைப் பிரிந்திருப்பவள்.

பூம்புகார் நகரிலுள்ள சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய நீர்த் துறைகளில் மூழ்கிக் காமவேள் கோட்டத்தைத் தொழுதால் பிரிந்த கணவன் திரும்பி வருவான் என்று தேவந்தி கூறக் கண்ணகி அதை மறுத்துவிடுகிறாள். 'கனாத்திறம் உரைத்த காதை' காட்சியில், அந்தணக் குலத்தில் பிறந்த தேவந்தியின் மாமனாருக்கு இரு மனைவிகள். அவர்களில் மாலதி என்பவளுக்கு மட்டும் குழந்தைகள் இல்லை. மற்றவளுக்கு ஒரு குழந்தை இருக்கிறது. குழந்தையின் பெற்றோர் வெளியே சென்றிருக்கும் நேரத்டில் மாலதி, மாற்றாளின் குழந்தைக்குப் பாலூட்டப் பால் விக்கி அது இறந்துவிடுகிறது. இதைக் கண்ட மாலதி குழந்தையைத் தூக்கிக்கொண்டு புகார் நகரிலுள்ள கற்பகத்தரு நிற்கும் கோயில், ஐராவதம் நிற்கும் கோயில், பலதேவனின் கோயில் என்று அங்குள்ள கோவில்களுக்கெல்லாம் ஓடி தேவர்களே எனக்குற்ற நோய்களைத் தீருங்கள் என வேண்டுகிறாள். அங்கேயே தவம் கிடக்கிறாள். அப்போது பிணங்களைத் தின்னும் இடாகினி என்னும் பேய்,

இடுபிணம் தின்னும் இடாகினிப்பேய் வாங்கி
மடிஅகத்து இட்டாள் மகவை
(சிலப். கனாத்திற. 21,22)

குழந்தையைத் தூக்கிக்கொண்டு பிணத்தைப் பிய்த்து வாயிலிட்டு விழிங்கி மறைந்துவிடுகிறது. இதைக் கண்டு மனம் வருந்திய மாலதி ஏங்கியேங்கி அழும்போது பாசண்டச் சாத்தன் என்ற தெய்வம் தோன்றி அன்னையே! நீ ஏங்கி அழாதே! உன் குழந்தை உயிரோடு இருப்பதைக் காண்பாய் என்று ஆறுதல் கூறி, தானே குழந்தையாக வந்து அவளது துயரைத் தணிக்கிறது. அவ்வாறே அவள் முன் ஒரு குழந்தை உருவில் கிடக்கிறது. மட்டற்ற மகிழ்ச்சியுடன் அக்குழந்தையை எடுத்துச் செல்லும் மாலதி அவனைத் தங்கள் மகனாக வளர்க்கிறாள். இப்பகுதியில் கதறி அழும் பெண்ணுக்கு பாசாண்டச் சாத்தன், இரங்கும் இரக்கக் குணத்தைக் காண இயலுகிறது.

மேலும் கோவலன் மாதவியை விட்டுப் பிரிந்து கண்ணகியிடம் வருகிறான். வந்து கண்ணகியின் துயரைக்கண்டு,

..................... ............... ..............யாவும்
சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடி
குலம்தரு வான்பொருள் - குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு
(சிலப். கனாத்திற. 68 – 71)

என்று வஞ்சகம் பொருந்திய கொள்கையினை உடையவளான பொய்த்தியோடு கூடியிருந்தமையால் நம் குலத்தவர் சேர்த்த மலைபோன்ற செல்வங்களை எல்லாம் தொலைத்தேன். இச்செயல் எனக்கு நாணத்தைத் தருகிறது என்று புலம்புகிறான்,

நலம் கேழ் முறுவல் நகைமுகம் காட்டிச்
சிலம்பு உள கொண்ம் என
(சிலப். கனாத்திற. 72 – 73)

கூறுகிறாள். கண்ணகியோ நன்மை பொருந்திய முருவலினைக் காட்டி சிலம்புகள் உள்ளன கொள்ளுங்கள் என்று கூறுகிறாள். இதனைக்கண்ட கோவலன் மதுரைக்குச் சென்று பொருள் ஈட்டலாம் என்று கூறி இருவரும் தங்கள் வீட்டைவிட்டு மதுரைக்குச் செல்ல முனைந்தனர். இப்பகுதியில் கண்ணகியின் இரக்கக்குணத்தையும் தன் கணவனான கோவலன் தவறு செய்தும் அதனைப் பொருட்படுத்தாமல் கணவனுக்குத்

துணை நிற்கும் கண்ணகியின் உயர்ந்த மனப்பான்மையையும் காணமுடிகிறது.

### விருந்தோம்பல்

கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் செல்லும் வழியில் கவுந்தியடிகளைச் சந்திக்கின்றனர். கவுந்தியடிகள் ஒரு சமணப் பெண் துறவி. கோவலனையும் கண்ணகியையும் மதுரைக்குக் கூட்டிச் செல்வது கவுந்தியடிகளேயாவார். கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகள் தங்கியிருந்த இடம் வழியாக மதுரைக்குச் சென்றனர். கவுந்தியடிகள் இருவரையும் கண்டு, நீங்கள் யார்? எங்கே? ஏன் செல்கிறீர்கள்? எனக் கேட்கிறார். கோவலன் கூறியதைக் கேட்ட கவுந்தியடிகள் உங்கள் முடிவு சரியில்லாதது. இந்தப் பெண்ணால் கொடிய காட்டு வழியைக் கடக்க இயலாது என்று சொல்லி யானும் வருகிறேன் என்று கூறி அவர்களோடு புறப்படுகிறார்.

மதுரையின் புறஞ்சேரியில் மாதரி கவுந்தியடிகளைக் கண்டு வழிபட்டாள். அப்போது, கோவலனையும் கண்ணகியையும் புறஞ்சேரியை விட்டு இருட்டுவதற்குள் மதுரைக்கு அனுப்பி வைத்துவிட வேண்டுமென்று எண்ணினார் கவுந்தியடிகள். ஆயர்குல மடந்தையாகிய மாதரியே அடைக்கலப் பொருளை ஏற்பதற்குத் தகுதியானவள் என மாதரியிடம்:

“மாதரி கேள்இம் மடந்தைதன் கணவன்
தாதையைக் கேட்கில் தன்குல வாணர்
அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்
உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவும்
இடைக்குல மடங்தைக்கு அடைக்கலம் தந்தேன்”
(சிலப். அடை.கா.125 - 130)

மாதரியே! இவர்கள் இருவரும் வணிக குலத்தார்கள். புகாரிலே மிகப் பெரிய செல்வந்தராவார். கோவலன், கண்ணகி என்பன இவர்களின் பெயர்கள். மாசாத்துவனின் மகன்தான் கோவலன் என்பதை அறிந்ததும் அகமகிழ்ந்து அவர்களுக்கு விருந்தோம்பி நல்ல மாளிகையில் தங்க வைத்தாள் மாதரி.

மேலும் கவுந்தியடிகள் அடைக்கலமாக வந்தவரைக் காப்பதால் கிடைக்கும் பயனை விளக்க ஒரு கதையைக் கூறுகிறாள்.

எட்டிப் பட்டம் பெற்ற சாயலன் என்பவனுடைய மனைவி வந்தவர்க்கெல்லாம் விருந்து படைத்தாள். ஒரு நாள் ஒரு தவசி வந்தார். அவருக்கு உணவு படைத்தாள். அவர் உண்டு மிகுந்த எச்சில் உணவையும் கழுவிய நீரையும் பசியால் வாடிய ஒரு குரங்கு உட்கொண்டு சிறிது பசி ஆறி அத்தவசியை ஏக்கத்துடன் பார்த்தது. அதன்பால் இரக்கம் கொண்ட அத்தவசி, அக்குரங்கை ஒரு பிள்ளைபோல் கருதிக் காக்கும்படிச் சாயலன் மனைவியிடம் அடைக்கலம் தந்து ஏகினார். அதன்படி அவள் அக்குரங்கை நன்கு பேணி வந்தாள். அக்குரங்கு இறந்த பின் அதன் பெயரால் தானம் செய்தாள். அந்தக் குரங்கு, மத்திம நாட்டிலே வாரணவாசி என்னும் ஊரில் உத்தர கௌத்தன் என்னும் அரசனுக்கு மகனாகப் பிறந்தது. குரங்கு உருமாறிய அந்த அரச குமரன் சிறப்புடன் பல தானங்கள் செய்து முப்பத்திரண்டாம் வயதில் இறுதி எய்தித் தேவன் ஆயினான். அவனே இப்போது வந்த வானவன் ஆவான். அவன் குரங்காக இருந்தபோது அடைக்கலம் தந்து காத்த நல்வினையால் சாயலனும் அவன் மனைவியும் பேரின்ப வீடுபேறு எய்தினர். இதனால், அடைக்கலம் காத்தலின் சிறப்பை நீ அறிவாயாக. இனிக் கண்ணகியைக் கோவலனோடு விரைந்து நின் இல்லத்திற்கு அழைத்துச் செல்வாயாக என்று அறிவுறுத்துகிறார். இவ்வாறு சிலப்பதிகாரம் அடைக்கலமாக வந்தவர்களுக்கு விருந்து உபசரிக்கும் முறையையும் விருந்தளிப்பதால் வரும் நன்மைகளையும் எடுத்துரைப்பதாக அமைகிறது.

### கருணை உள்ளம்

கோவலன் புகார் நகரில் மன்னருக்கு இணையாக வைத்துப் பார்க்கும் உயர்ந்த வணிகர் குடியில் பிறந்தவன். இவன் சிறந்த கருணை உள்ளம் படைத்தவன் என்பதற்குப் புகார் காண்டத்தில் எந்தச் செய்தியும் இல்லை. ஆனால் மதுரைக்காண்டத்தில் தலைச்செங்கானம் என்ற ஊரைச் சேர்ந்த அந்தணனான மாடலன் வாயிலாக இளங்கோவடிகள் இதனை உணர்த்துகிறார்.

“கடக்களிறு அடக்கிய கருணை மறவ”

(சிலம்பு, அடை. 53)

கோவலன் தன் கருணை உள்ளத்தின் காரணமாகக் கூனுடைய மறையோனைத் தாக்கிய மதங்கொண்ட யானையை அடக்கி அவனைக் காத்து, உயிர்களிடம் கொண்ட இரக்கம் காரணமாக யானையைக் கொல்லாதுவிட்ட கருணை உள்ளம் கொண்டவர் என்றும் அதே போன்று,

“கான் போன கணவனைக் கூட்டி
ஒல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ”

(சிலம். அடை. 73-75)

கீரிப்பிள்ளையைத் தன் பிள்ளையாக ஒரு மறையவன் வளர்த்து வந்தான். பிள்ளையைக் கடிக்க வந்தப் பாம்பினை அக்கீரிப்பிள்ளை கொன்றது. அதனையறியாத அவன் மனைவி கீரிப்பிள்ளையைக் கொன்றாள். உடனே அவளைப் பிரிந்து காட்டில் வாழ்ந்தான். அவர்களின் பாவம் தொலைய நிறைய செல்வம் கொடுத்து அவர்களைச் சேர்த்து வாழ வைத்தான். மேலும்,

“பற்றிய கிளைஞரின் பசிப்பிணி யறுத்துப்
பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்”

(சிலம். அடை. 89-90)

என்னும் அடிகளில் பொருளுக்காக ஒருவன் பத்தினிப் பெண்ணுக்கு பழி ஏற்படுமாறு அவள் கணவனிடமே சென்று பொய் கூறினான். தவறு செய்தவர்களைப் பாசக் கயிற்றால் பற்றி அறைந்து உண்ணும் பூதம் ஒன்று பொய் கூறியவனைத் துன்புறுத்தியது. அதைக் கண்டு அவன் தாய் துடித்தாள். உடனே கோவலன் அந்தத் தாயின் வேதனையைப் பொறுக்கமுடியாமல் பூதத்திடம் சென்று தன் உயிரை எடுத்துக்கொண்டு, அவனை விடுவிக்கும்படி கேட்டான். அதற்கு பூதம்,

“நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி யிழக்கும் பண்பீங்கு இல்லை”

(சிலம். அடை.காதை, 84-85)

என்று கூறியது. தவறு செய்வதனை அறைந்து கொன்றது. செயலற்று இருந்த தாயோடு கோவலன் சென்று அவனின் சுற்றத்தையும் பசிப்பிணியின்றிப் பல ஆண்டுகள் காத்த உயர்ந்த மனம் கொண்டவன். இச்சான்றுகள் வாயிலாகக் கோவலன் சிறந்த கருணை உள்ளம் கொண்டவன் என்பது சிலம்பில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அதுபோன்று கண்ணகியின் கருணையுள்ளம் இரு இடங்களில் வெளிப்படக் காணலாம். கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் மதுரைக்குச் செல்லும் வழியில் தென்கரை பூம்பொழிலில் தங்கியிருந்தபோது, வம்பப் பரத்தையும் வறுமொழியாளனும் காமனும் தேவியும் போன்ற இவர்கள் யார்? என வினவினார். அதற்குக் கவுந்தியடிகள், “இவர்கள் எம் மக்கள்” என்று கூறக்கேட்டு கற்றறிந்தீர் உடன் வயிற்றிர் ஒருங்குடன் வாழ்க்கை நடத்துவதுண்டோ?” என அவர்கள் வினவினர். அது கேட்ட கண்ணகி நடுக்கும் துயர் அடைந்தாள். உடனே கவுந்தியடிகள் தன் தவ வலிமையால் முதுநரிகளாகுக எனச் சபித்தார். அதற்குக் கண்ணகியும் கோவலனும் வருந்தி “செய்தவத்தீர் நெறியில் நீங்கியோர் நீரல கூறினும் அறியாமையால் என்று அறிதல் வேண்டும் ஆகையால் அவர்களுக்கு உய்திக்காலம் உரைக்க வேண்டும் என்று வேண்டி, தன்னைக் காயப்படுத்தியவர்களுக்கு” இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யும் உயர்ந்த கருணை உள்ளத்துக்குச் சான்றாக இந்நிகழ்வு அமைகிறது.

கோவலன் இறந்ததை அறிந்த கண்ணகி தன் கணவன் கள்வன் அல்ல என்பதை எடுத்துரைத்து மதுரையை எரித்து அழிக்கிறாள். எரியும் அக்கினிக்கு அவள் இடும் கட்டளை அவளின் கருணை உள்ளத்துக்குச் சான்றாகும்.

“பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று காய்த்திய”

(சிலப், வஞ்சின, 54-56)

என்ற பாடலில் கண்ணகியின் தாய்மையுள்ளம் வெளிப்பட்டுள்ளது.

## முடிவுரை

சிலப்பதிகாரம் முழுவதும் ஆன்மநேயக் கருத்துகள் நிறைந்திருப்பதை அறிந்துகொள்ள இயலுகிறது. மேற்கூறிய அறவுரை சமுதாயத்தில் மனிதநேயம் மலர அடிப்படையாகும். தளராது இவற்றைப் பின்பற்றி இன்னலற்ற வாழ்வைச் சமுதாயம் வாழ வேண்டும் என இளங்கோவடிகள் வலியுறுத்துகிறார்.

## பார்வை நூல்கள்


சாமி. சிதம்பரனார், சிலப்பதிகாரத் தமிழகம், அறிவுப் பதிப்பகம், சென்னை, தமிழ்நாடு 2008.

சீனிவாசன், ரா., சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும், அணியகம், சென்னை, தமிழ்நாடு, 1987.

செல்லம் கோவிந்தன், சிலப்பதிகாரக் காலமும் நாட்டுப்புற வழக்காறுகளும், அச்சிடப்படாத ஆய்வுக்கட்டுரை, தமிழ்நாடு, 2005.

மாணிக்கம், வ. சுப, இரட்டைக்காப்பியங்கள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, தமிழ்நாடு, 2007.


## To cite this article

*****************

Hepsy Rose Mary, A. (2026). சிலப்பதிகாரத்தில் ஆன்மநேயம். *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 9*(3), 25-30.

*****************************************************************************************

## ABOUT THE AUTHOR



***Dr Hepsy Rose Mary A.*** *is an Associate Professor and Head of the Department of Tamil at the University of Kerala, Kerala, India. She obtained her Ph.D. from the University of Kerala with a dissertation titled "Veerachozhiyam and Neminatham: A Comparative Study." She has published seven books and eighty research articles in various academic journals, including twenty in UGC-referred journals. She has actively participated in and organized numerous national and international seminars. She has also conducted five batches of Refresher Courses for college and university teachers. In recognition of her academic excellence, she has received the Best Faculty Award and the Aayvu Chemmal Award. She has completed four Minor Research Projects and one Major Research Project.*

*****************************************************************************************